11.06.2026 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி (ஒ.எஸ்.எண்.114 /2016 ) திருமதி.உலகம்மாள்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி –

1) வாதி வழக்கு போட்டுள்ள இடம் டவுண் சர்வே எண்.32 என்றால் சரிதான். வழக்கு போட்ட இடத்தை 6,7 வருடங்களுக்கு முன்பு அளக்க வந்தார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. தாவா இடத்தை அளக்க வந்தார்கள் என்றும் அன்றைய எனது தரப்பில் பிரச்சனை செய்ததால் காவலர் உதவிடன் தாவா இடத்தை மீண்டும் அளந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனது எதிர்வழக்குரையிலும்,நிருபண வாக்குமூலத்திலும் தாவாச்சொத்து கட்டிடம் கட்டியது போக கையிருப்பு இடம் எனக்கு தனித்துப்பாத்தியப்பட்டது என்று சொல்லியிருப்பதால் அதற்கு ஆதரவாக கட்டிட வரைபட அனுமதியோ, பட்டா, சிட்டா அடங்கல், புலவரைபடம் தீர்வை ரசீதுகள் ஆகியவற்றை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்லுவது உண்மையா, பொய்யா என்பது நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஆவணங்களை வரவழைத்து பார்த்தால் உண்மை விவரம்தெரிய வரும் என்றால் சரிதான். தாவா 1ம்தபசில் சொத்து மற்றும் சேர்ந்தணைந்த சொத்துக்கள் திருமதி.கோமதியம்மாளுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று சாட்சி வாக்குமூலம் மற்றும் எதிர்வழக்குரையில் கூறியுள்ளதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கோமதியம்மாளுக்கு பூர்வீகம் என்று கூறுவதற்கு அவருக்கு தாய்வழி பூர்வீகமா அல்லது தந்தை வழி பூர்வீகமாக என்று கூறவில்லை என்றால் சரிதான். கோமதியம்மாளின் இறப்பு, வாரிசு சான்று வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் வாதி தாக்கல செய்துள்ள வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத காரணத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ள விவரத்தை எதிர்வழக்குரையில் சொல்லாமல் தற்போது சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. சாட்சி சொல்ல வந்துள்ள தருணத்திலாவது தாவாச்சொத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்த விவரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் சரியல்ல.

2) தாவாச்சொத்தை நீதிமன்ற ஆணையர் வந்து அளந்த விவரங்களும் அறிக்கை விவரங்களும் எனது வழக்கறிஞர் மூலமாகவும், நேரிடையாகவும் தெரிந்துகொண்டு வேண்டுமென்ற மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையிலும், நிருபவாக்கு மூலத்திலும் 1ம்தபசில் வழியாக வந்து

சென்று வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1ம்தபசில் சொத்துக்கும் எனக்கும் எந்தவித உரிமையும், அனுபவமும் எந்தக்காலத்திலும் இருந்தது கிடையாது என்றால் சரியல்ல. 1வது தபசில் சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து கிடையாது என்றும், 1வது தபசில் சொத்து குறித்து சமூக நீதிமன்றத்தில் கட்சி செய்வதற்கு எந்தஒரு அதிகாரமும் கிடையாது என்றால் சரியல்ல. 1வது தபசில் சொத்தில் எல்லா ஆக்கிரமிப்பும் செய்து கொடுத்துள்ளேன் என்றும் ஆணையர் அறிக்கைப்படி அகற்றிக்கொடுக்க கடமைப்பட்டவர் என்றால்சரியல்ல. நீதிமன்றத்தில் வாதி தரப்பில் தபசில் சொத்தை அளவீடு செய்வதற்கு நீதிமன்ற ஆணையர் ஆட்சேபனையில்லை என்று மேற்படி மனு அனுமதிக்கப்பட்டுநீதிமன்ற அறிக்கை தாக்கல் செய்த பின்பு நீதிமன்ற அறிக்கையிக்கு எந்தவித ஆட்சேபனையும் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாபட்சத்தில் அதற்கு உட்பட்டு நடக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. எனது சாட்சி வாக்குமூலத்தில் நீதிமன்ற ஆணையர் அறிக்கை சம்பந்தமாக மேற்படி அறிக்கை சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றோ, நடைமுறைப்படுத்த முடியாது என்றோ எந்த ஒரு வாசகமும் குறிப்பிட்டு மறுத்து கூறவில்லை என்றால் சரியல்ல. 1வது தபசில் சொத்தை பொறுத்தளவில் வாதி கேட்டுள்ள பரிகாரம் பெற்றுக்கொள்ள தகுதியுள்ளவர்என்றும் வாதியின் வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றால்சரியல்ல. எனக்கோ மற்ற என்னை சார்ந்த மற்ற பிரதிவாதிகளுக்கோ தாவாச்சொத்தை பொறுத்து எந்தக்காலத்திலும் அனுபவமோ, உரிமையோ இருந்தது கிடையாதுஎன்றும் எனது எதிர்வழக்குரையில் பிராது தபசில் சொத்திற்கு ஆவண ரீதியாக பாத்தியப்பட்டது என்று சொல்லுவது உண்மையல்ல என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை</u> –வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிங்க வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
11.06.2026.